மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

# க.பொ.த (உ/த)ப் பரீட்சை – 2019

## மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு

# இஸ்லாம்

01. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாற்றுப் பின்னணியை ஆதாரங்கள் மூலம் விளக்குக.

❖ **இலங்கையில் இலங்கையில் இஸ்லாம் அறிமுகம் ஆவதற்கான பின்னணி**

- இலங்கையின் புவியியல் நிலை (இலங்கையின் இயற்கைச் சூழலும் பௌதீக நிலக் கட்ட மைப்பும்)
- நன்னீர் வசதி
- பாவா ஆதம் மலையை தரிசிக்க வந்தமை

❖ **சமூகநிலை**

- அரபு வணிகர்களின் வருகை
- வணிகப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் காணப்பட்டமை
- கரையோர குடியிருப்புக்கள் தோன்றியமை
- வகப் இப்னு அபி ஹப்ஸா அவர்களின் வருகை
- இரண்டாம் அக்ர போதி மன்னன் இஸ்லாத்தின் தூதை அறிந்துவர ஒரு குழவை அனுப்பி யமை இப்னு ஸஹ்ரயார் "அஜாயிபுல் ஹிந்து" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை
- பனூ ஹாஸிம்கள் சிலர் இலங்கைக்கு வந்து குடியேறியமை
- சமய போதகர் காலித் இப்னு பகாயாவின் வருகை
- இலங்கையின் பல பிரதேசங்களில் குடியேற்றங்கள் அமைத்து வாழ்ந்தமை உதாரணமாக யாழ்ப்பாணம், கொழும்பு, காலி, திருகோணமலை....

❖ **அரசியல் நிலை**

- மன்னர்களின் ஆதரவு கிடைத்தமையும் அவர்களுடன் நல்லுறவு பேணி சிநேகபூர்வமாக நடந்துகொண்டமையும்.
- மன்னர்களால் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமை
- ஒல்லாந்தர் காலம் முதல் முஸ்லிம் தனியார் சட்டம் நடைமுறைக்கு வந்தமை

02. இலங்கையின் தேசியத்திற்கும் முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பினை விளக்குக?

இலங்கை முஸ்லிம்கள் பூர்வீகம் தொட்டு இலங்கையின் தேசியத்திற்கு பல துறைகளில் பல்வேறு பட்ட பங்களிப்புகளை வழங்கி வந்துள்ளமை வரலாற்று ரீதியான உண்மையாகும். அந்த வகையில்

❖ **வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பொருளியல் பங்களிப்பு**

- இலங்கை மக்களுக்கு தேவையான பொருட்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்துள்ளன.
- சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தமை
- உள்நாட்டு விவசாய செயற்பாடுகளில் பங்கெடுத்தமை
- பாரியளவு நீர்ப்பாசன நிர்மாணப் பணிகளை மேற்கொண்டமையும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமையும்

❖ **மருத்துவத்துறை பங்களிப்பு**

- யுனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தியமையும் அதனை வளர்த்தமையும்
- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலப்பிரிவில் "பெஹேத்கே முகாந்திரம் நிலமே" பதவி முஸ்லிம் களுக்கு வழக்கியமை
- ஒல்லாந்தர்கள் கட்டிய வைத்தியசாலைகளில் முஸ்லிம் மருத்துவர்கள் பணியாற்றியமை

❖ **அரசியல் பங்களிப்புகள்**

- மன்னர்களின் தூதுவர்களாக வெளிநாடு சென்றமை (முதலாம் புவனேகபாகு காலத்தில் அபூ உஸ்மான் எகிப்து சென்றமை)
- போர்த்துக்கேயரை வெளியேற்ற மாயா துணையுடன் சேர்ந்து போராடியமை
- இலங்கையின் சுதந்திர விடுதலைக்காக போராடியமை
- மன்னர்களின் அரசவையில் மந்திரிகளாக செயற்பட்டமை

❖ **சமூகத்தோடு தொடர்பான பங்களிப்புகள்.**

- தவளம் போக்குவரத்து முறையை அறிமுகம் செய்தமை
- நெசவுத் தொழிலை அறிமுகம் செய்தமை
- தேசப்பற்றுடனும் ஏனைய இன மக்களுடனும் நட்போடு இணைந்து வாழ்ந்தமை
- கட்டடக்கலையின் விருத்திக்கு பங்களிப்புச் செய்தமை

**தேர்ச்சி:- 03 (வஹியின் அடிப்படையில் அமைந்த மூலாதாரங்களை விளங்கி செயற்படுவார்)**

**வினா - 02**

01) இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களை எத்தனை வகையாகப் பிரித்து நோக்கலாம்? அவற்றை குறிப்பிட்டு வரைவிலக்கணப்படுத்துக? (2 புள்ளி)

02) "அல்குர்ஆன் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரம் ஆகும்" இதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக? (4 புள்ளி)

03) "அல்குர்ஆன் ஏனைய நூல்களிலிருந்து அமைப்பு ரீதியில் பல்வேறு வித்தியாசங்களையும் கொண்ட ஒருவேத நூல் ஆகும்" இதற்கான ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளி)

04) முஸ்லிம்களாகிய எமக்கு அல்குர் ஆனின் மீது உள்ள கடமைகளைக் குறிப்பிட்டு விளக்குக? (3 புள்ளி)

**விடைகள்**

01) 2

அடிப்படை மூலாதாரங்கள் - அல்குர்ஆன், அல் ஹதீஸ்

துணை மூலாதாரங்கள் - இஜ்மா உ, கியாஸ், இஸ்திஹ்ஸான்
மஸ்லஹா முர்ஸலா, உர்பு, கவ்லுஸ்ஸஹாபி
இஸ்திஸ்ஹாப், ஷராபி உஸாபிகா

02)
- ✵ பூரண வழிகாட்டலைக் கொண்ட தெய்வீக ஆக்கம்
- ✵ மனிதனுக்கு வழிகாட்டுகின்றது
- ✵ அல்குர்ஆன் அறிவுக் கருவூலம்
- ✵ துணை மூலாதாரங்கள், பிறகலைகளின் ஊற்று
- ✵ பண்பாட்டுப் போதனைகளைக் கொண்டுள்ளது
- ✵ முழு மனித சமூகத்துக்குமான நீதிமிக்க வழிகாட்டல்
- ✵ அல்லாஹ் தனது படைப்புக்களில் சிறந்த படைப்பாக மனிதனைத் தேர்ந்தெடுத்து அவனுக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளான். அந்த வரிசையில் இறுதியாக அருளப்பட்ட வேதமே அல்குர்ஆன் ஆகும். இதுவே ஆரம்ப அடிப்படை மூலாதாரமாகும்.

03)
- ✵ அல்குர் ஆனில் மேலதிகம் அல்லது தெவிட்டல் இல்லை.
- ✵ ஒரு கருத்தை முன் வைக்கும் பாங்கு கதைகள், நிகழ்வுகள், சம்பவங்கள்
- ✵ ஸூராக்களின் பெயர்கள் காணப்படல்
- ✵ அத்தியாயங்கள் - 114
- ✵ ஆயத் (வசனம், அத்தாட்சி, சான்று) காணப்படல்
- ✵ இஃராப் குறிகள் காணப்படல்
- ✵ கிராஅத் (ஓதும்முறை) 7 மொழி வழக்குகளில் ஓத முடியும்.

04)
- ✵ ஓதுதல் (கிராஅத்)
- ✵ மனனமிடல்
- ✵ விளக்குதல் (பஹ்ம்)
- ✵ நடைமுறைப்படுத்துதல் (தன்பீத்)
- ✵ எத்தி வைத்தல்

→ தஜ்வீத் வகுப்புக்களை நடாத்தல்

→ அறபு மொழியை கற்பித்தல்

→ அல்குர் ஆனை மனனமிட ஏற்பாடு செய்தல்

→ குர்ஆன் விளக்கவுரைகளை நடாத்தல்

→ குர்ஆனிய சிந்தனைகளை ஆக்கங்களாக பிரசுரித்தல்

→ குர்ஆன் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துதல்

**வினா - 03**

01) தப்ஸீர்கலை எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளி)

02) ஸுன்னா ஓர் சட்ட மூலாதாரம் என்ற வகையில் அதன் அவசியத்தைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி)

03) போலியான ஹதீஸ்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை முன் வைத்து விளக்குக. (6 புள்ளி)

04) நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாற்றை ஆதாரங்களுடன் முன் வைத்து விளக்குக. (8 புள்ளி)

**விடைகள்**

01) அல்குர்ஆன் வார்த்தைகளை உச்சரிக்கும் விதம், மொழிக்கருத்துக்கள், குர்ஆனின் சொற்களும் வசனங்களும் உணர்த்தி நிற்கும் யதார்த்தங்கள், குர்ஆனிய கலைகள் என்பன குறித்து ஆராயும் கலை ஆகும்.

02) 1.
- அல்குர் ஆனைப்புரிந்து கொள்ள ஸுன்னா அவசியம்
- குர்ஆன் சுருக்கமாகக் கூறியதை ஸுன்னா விரிவாக விளங்கப்படுத்துதல்
- குர்ஆன் கூறியதை ஸுன்னா மேலும் உறுதிப்படுத்துதல்
- குர்ஆன் சில விடயங்களை பொதுவாகக் குறிப்பிட ஹதீஸ் அதனைக் குறிப்பாக்கி (ஹாஸ்) விளக்குதல்
- குர்ஆன் பொதுவாக (முத்லக்) கூற ஹதீஸ் அதனை வரையறுத்து (முகய்யத்) விளக்குதல்
- அல்குர் ஆன் குறிப்பிடாத சில விடயங்களை ஹதீஸ் குறிப்பிடுதல்.

2. இஸ்லாமிய மூலாதாரங்களுள் ஸுன்னாவும் ஒன்றாகும்
3. இஜ்திஹாத் பணியை மேற்கொள்ள ஸுன்னா அவசியப் படுகின்றது.
4. முன்மாதிரியான இஸ்லாமிய வாழ்வைப் பெற்றுக் கொள்ள ஸுன்னா அவசியப்படுகின்றது.

03)
- அரசியல் ரீதியான காரணிகள்
- மொழி, இன, பிரதேச மத்ஹப் வெறி
- உபதேசிகளும், கதை கூறுபவர்களும் இட்டுக் கட்டியவை
- பிக்ஹ் கருத்து வேறுபாடுகள்
- அஜீதாவில் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
- விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டமை
- மார்க்கத்தில் அறியாமையும், நன்மை செய்ய வேண்டும் என்ற ஆசையும்
- ஆட்சியாளர்களினதும், செல்வந்தர்களினதும் நலன் தேடுதல்.

04) நபி(ஸல்) அவர்களின் காலத்தில் ஹதீஸ்களை பாதுகாக்க நபித்தோழர்களினால் பின்பற்றப்பட்டவை

1. மனனமிடல்
2. எழுதிப் பாதுகாத்தல்
3. வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பாதுகாத்தல்

- திண்ணைத் தோழர்கள், உம்மஹாதுல் முஃமினீன்கள் நபிகளாரின் பணியாட்கள் தனிப் பட்ட அடிப்படையில் மனனத்தின் மூலம் ஹதீஸ்களைப் பாதுகாத்தனர்.
- நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஹதீஸ்களை எழுதிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை நபித் தோழர்கள் மேற்கொண்டனர்.
- ஹதீஸ்களைப் பாதுகாக்கும் விடயத்தில் நபித்தோழர்கள் தமது வாழ்க்கையில் ஹதீஸ் களை அல்லது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி வந்தமையாகும்.

**தேர்ச்சி:- 04 (இஜ்திஹாதின் மூலம் பெறப்படுகின்ற துணை மூலாதாரங்களை இனங்கண்டு நடைமுறைப் படுத்துவார்.)**

**வினா - 04**

*01) இஜ்திஹாத் என்பதை வரைவிலக்கணப்படுத்துக? (2 புள்ளி)*
*02) முஜ்தஹித் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகளைக் குறிப்பிட்டு விளக்குக? (4புள்ளி)*
*03) சட்டத்துறையின் வளர்ச்சியில் இஜ்திஹாதின் பங்கை சுருக்கமாக விளக்குக? (6 புள்ளி)*
*04) இஜ்மா உ ஓர் சட்ட மூலாதாரம் என்பதற்கான அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களைக் குறிப் பிட்டு விளக்குக. (8 புள்ளி)*

**விடைகள்**

*01) அல்குர்ஆனோ ஸுன்னாவோ நேரடியாகத் தீர்வு கூறாத ஒரு பிரச்சினைக்கு ஒரு சட்ட அறிஞர் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளும் அறிவியல் ரீதியான கடும் முயற்சியையே இஸ்லாமிய வழக்கில் இஜ்திஹாத் என்பர்.*

*02)*
- ✸ *அல்குர்ஆன் பற்றிய ஆழமான அறிவு*
- ✸ *ஸுன்னா பற்றி ஆழமான அறிவு*
- ✸ *ஆழமான அறபுமொழி அறிவு*
- ✸ *முன்னர் இடம்பெற்றுள்ள இஜ்மாவான முடிவுகளைப் பற்றிய அறிவு*
- ✸ *உஸுலுல் பிக்ஹ் பற்றிய அறிவு*
- ✸ *தக்வா, நீதி, நேர்மை பாவச் செயல்களில் ஈடுபடாமை.*

*03)*
- ✸ *நபி(ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரை அல்குர்ஆனும் ஹதீஸுமே சட்டவாக்கத்துக்கான மூலா தாரங்களாகக் காணப்பட்டன. வஹி வராதபோது நபி(ஸல்) அவர்கள் இஜ்திஹாத் செய்திருக் கின்றார்கள்.*
- ✸ *இஜ்திஹாதின் காரணமாகவே இஸ்லாமிய சட்டக்கலை ஒரு தனியான கலையாக உருவாகி பாரிய வளர்ச்சியைக் கண்டது.*
- ✸ *அல்குர் ஆனையும் ஹதீஸ்ஸையும் அடிப்படையாக வைத்து துணை மூலாதாரங்கள் தனியாக உருவாவதற்கு இஜ்திஹாத் காரணமாக அமைந்தது.*
- ✸ *சட்டமியற்றாது வெறுமையாக விடப்பட்டுள்ள பகுதிக்குத் தேவையான சட்டங்களை இயற்று வதில் இஜ்திஹாத் பங்காற்றுகின்றது.*

**04) அல்குர்ஆன் ஆதாரங்கள்**
- ✸ *“இன்றும் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னர் எவர் (நம்முடைய) இத் தூதருக்கு மாறு செய்து, விசுவாசிகளின் வழியில்லாத (வேறுவழியான) தைப் பின்பற்று கிறாரோ அவரை நாம் அவர் திரும்பிய (தவறான) வழியிலேயே திருப்பி விடுவோம் (14:115)*
- ✸ *“நீங்கள் அல்லாஹ்விற்கு வழிப்படுங்கள், அவ்வாறே அவனது தூதருக்கும் வழிப்படுங்கள். இன்னும் உங்களில் (அல்லாஹ்விற்கும், ரஸுலுக்கும் கட்டுப்படுகின்ற) தலைவர்களுக்கும் வழிப்படுங்கள்” (4:59)*
- ✸ *(4:83)*

*ஸுன்னா ஆதாரங்கள்*

* “சத்தியத்தில் நிலைத்திருக்கக்கூடிய ஒரு கூட்டம் எனது சமூகத்தில் என்றென்றும் இருந்து வருவார்கள்”
* “எவர் ஜமா அத்தை விட்டும் பிரிந்து மரணிக்கின்றாரோ அவரது மரணம் (ஜாஹிலிய்யத்தை) மடமையைச் சேர்ந்ததாகும்.

**வினா - 05**

01) அர்கானுல் கியாஸின் அடிப்படைகளைச் சுருக்கமாகத் தருக. (2 புள்ளி)

02) கியாஸின் வகைகள் மூன்றையும் குறிப்பிட்டு அவற்றை விளக்குக. (4 புள்ளி)

03) இஸ்திஹ்ஸானை சட்ட மூலாதாரமாக ஏற்க மறுப்போர் முன் வைக்கும் நியாயங்களைக் குறிப் பிட்டு விளக்குக. (6 புள்ளி)

04) இஜ்திஹாதின் அவசியம் மற்றும் அதன் பயன்களைக் குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளி)

**விடைகள்**

01)
* அஸ்ல் - இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களினால் தெளிவாக சட்டம் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்.
* பர்உ - தீர்வுகாண வேண்டிய புதிய பிரச்சினை.
* இல்லத் - காரணம், பொதுத்தன்மை
* ஹுகும் - அல்குர்ஆன், ஸுன்னா, இஜ்மா எனும் சட்டமூலாதாரங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள்.

02)
* கியாஸுல் அவ்லா
* கியாஸுல் முஸாவீ.
* கியாஸுல் அத்னா

**கியாஸுல் அவ்லா**

பார்உ வில் காணப்படும் இல்லத் அஸ்லின் இல்லத்தை விட பெறுமானத்தில் கூடுதலாக இருத்தல்.

**கியாஸுல் முஸாவீ**

அஸ்லிலும் பர்உவிலும் இல்லத் சமமான பெறுமானம் கொண்டதாக இருத்தல்.

**கியாஸுல் அத்னா**

அஸ்லை விட பர்உவில் உள்ள இல்லத்தின் பெறுமானம் குறைவானதாக இருத்தல்.

03)
* எவர் ஒன்றை சிறந்ததெனக் கருதி முடிவெடுக்கின்றாரோ அவர் சட்டமியற்றியவராக மாறுகின் றார். சட்டமியற்றும் அதிகாரம் அடியானுக்கில்லை. அது அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரிய தாகும்.
* சிறந்ததென ஒருவர் கருதுவதானது அவரது விருப்பு வெறுப்பைச் சார்ந்ததாகும். விருப்பு வெறுப்பானது சட்டத்திலும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கும். எவரும் ஒரு குறித்த திசையை நோக்கி அதன் பக்கமே கஃபா இருக்கின்றது எனக்கருதி தொழ முடியாது.
* நபி முஹம்மது (ஸல்) அவர்கள் உயர்ந்த அறிவுத் தரத்தில் இருந்தும் கூட இஸ்திஹ்ஸானுக் கும் இடம் கொடுத்தால் தகுதியற்றோரும் இஜ்திஹாத் செய்ய முற்படலாம்.

04) **இஜ்திஹாதின் அவசியம்**
* அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்து சட்ட வசனங்களைப் பிரித்து இனங்காண்பதற்கு.
* பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களில் மிகப் பொருத்தமானதை தெரிந்து கொள் வதற்கு
* அல்குர்ஆன், ஸுன்னாவில் நேரடியான விளக்கமில்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறுவதற்கு
* இஸ்லாமிய அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களில் மிகப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுப் பதற்கு
* சட்ட மூலங்களிலிருந்து சட்ட விதிகளை வகுத்துக் கொள்வதற்கு

**இஜ்திஹாதின் பயன்கள்**

- இஸ்லாம் எக்காலத்துக்கும் ஏற்றது என்பதை நிறுவ உதவுகிறது.
- அறிவு ரீதியாக முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க உதவுகிறது
- இஸ்லாம், சிந்தனைச் சுதந்திரத்திற்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

**வினா 06**

**இஸ்லாத்திற்கு முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகளுள் ஷீஆக்களும் அடங்குவர். அவ்வகையில் ஷீஆக்கள் தொடர்பாக பின்வரும் தலைப்புக்களினூடாக ஆராய்க.**

*01) தோற்றம்*

*02) ஷீஆக்களின் அகீதா*

*03) ஷீஆக்களின் உட்பிரிவுகள்*

**அறிமுகம்**

ஷீஆ என்ற சொல் மொழி ரீதியில் "பிரிவு", "கூட்டம்" என்றும் ஆதரவு அணி என்றும் பொருள் படும்.

இஸ்லாமிய மரபில் "அலி(ரழி) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தவர் மீதும் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துவதுடன் அவர்களுக்கே நபியவர்களின் பின் அரசியல், ஆன்மீக, தலைமைத்துவம் வாரிசு அடிப்படையில் சென்றிருக்க வேண்டும் எனக்கூறி முந்திய கலீபா அலி மீதும் அவர்களுக்கு ஆதரவான ஸஹாபாக்கள் மீதும் தப்பிப்பிராயத்தை பரப்பும் சிந்தனைப் பிரிவு" ஷீஆ எனப்படுவர்.

**01) தோற்றம்**

- "எனது ஆன்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக இவரும் இவரைப் பின்பற்றும் பிரிவினருமே (ஷீஆ) மறுமையில் வெற்றி பெற்றோர் ஆவர்" என்று நபி(ஸல்) அலி(ரழி)யைப் பார்த்து கூறிய ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு நபி (ஸல்) அவர்களின் வபாத்தைத் தொடர்ந்து அலி(ரழி) தானே அடுத்த கலீபா எனக் கருதியபோது சில ஸஹாபாக்கள் அவருக்கு ஆதரவு அளித்ததனால் இப்பிரிவு தோற்றம் பெற்றது.
- உஸ்மான் (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கலீபா அலி(ரழி) அவர்கள் அநீதியான முறையில் கொலை செய்யப்பட்ட கலீபாவுக்காக பழி தீர்க்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அலி(ரழி) உடனடியாக நிறைவேற்றாமையால் ஷீஅது அலி எனும் அணி தோற்றம் பெற்றது.
- பலம்பெற்றிருந்த இஸ்லாமியப் பேரரசை வீழ்த்துவதற்காக உஸ்மான் (ரழி) அவர்களது ஆட்சியின் இறுதிக் காலத்தில் உருவான மக்களின் அதிருப்திகளைச் சாதகமாகப் பயன்படுத்தி கிலாபத்துக்கு எதிராக மக்களை அணிதிரளச் செய்வதற்காக அப்துல்லாஹ் இப்னு ஸபா என்பவனால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றிய சமயப் பிரிவு என்பதை அஹ்லுஸ்ஸுன்னா லல் ஜமாத்தைச் சேர்ந்த பெரும்பாலோரது கருத்தாகும்.
- யஸீதுடைய காலத்தில் அலி (ரழி) அவர்களது மகன் ஹுஸைன் (ரழி) அவர்கள் ஈராக் மக்களின் அழைப்பை ஏற்று அங்கே செல்லும் போது கர்பலா என்ற இடத்தில் அரச படையினரால் மிகத்துக்ககரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள் இதனால் ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளர்கள் ஹுஸைன் (ரழி) அவர்களுக்காக தம் உயிரையும் அர்ப்பணித்து உமையாக் கலாபத்துக் கெதிராகப் போராட சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர் அன்றிலிருந்து ஷீஆ என்ற ஒரு பிரிவு முஸ்லிம்கள் மத்தியில் வலுப்பெற்றது.

**02) ஷீயாக்களின் அகீதா**

- ஷீஆக்கள் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு முரணாக அவர்களினால் தீவிரமாக நம்பப்படும் கோட்பாடுகளுள் சில வருமாறு
- இமாமத் (தலைமைத்துவம்)

தலைமைத்துவம் எனும் பொருள் தரும் "இமாமத்" என்ற சொற்பிரயோகம் ஷீஆக்களிடத்தில் அகீதா சார்ந்த விடயமாக நம்பப்படுகிறது.

ஷீஆக்கள் முன்வைக்கும் இமாமியக் கோட்பாட்டில் காணப்படும் குறைபாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- கதிர்கும் தொடர்பான ஹதீஸின் நம்பகமற்ற தன்மை
- இமாம்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதில் ஷீஆக்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடுகள்.
- இமாம்களின் எண்ணிக்கையில் காணப்படும் கருத்து வேறுபாடுகள்
- இமாம்களின் எண்ணிக்கை பன்னிரண்டுடன் முற்றுப் பெறுதல்
- இமாமியக் கோட்பாடு ஷீஆக்கள் கூறும் ஆரம்ப கால இமாம்களிடம் காணப்படாமை
- ஷீஆக்களின் நம்பிக்கைகள் அவ்வக்காலங்களில் தோன்றிய அரசியல் பின்னணிகளின் பின் புலத்தில் மாற்றங்களுக்குட்பட்டமை
- பின்புலத்தில் பிறகலாசாரத்தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்தியமை

போன்றவை குறைபாடுகளாக காணப்படுகின்றது

இமாமியச் சிந்தனையாளராக அலி(ரழி), ஹஸன்(ரழி), ஹுஸைன்(ரழி) மற்றும் அலி இப்னு ஹுஸைன் (ரழி) முதலிய இமாம்களுடன் எனும் 12 இமாம்கள் காணப்படுகிறனர்.

- இஸ்மத் என்பதன் மொழிக்கருத்து தடுப்பு, பாதுகாப்பு என்பதாகும். அகீதாத் துறைப் பரிபாஷையில் பாவங்கள் தவறுகள் செல்வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது அவ்வாறு விலக்களிக்கப்பட்டவர் மஃஸீம் என்று அழைக்கப்படுகின்றார். ஷீஆக்களது அகீதாவில் இமாம்கள் மஃஸீம்களாவர்.

**கபா**

மறைவு என்று மொழி ரீதியாக பொருள்படும் இச்சொற்பிரயோகம் ஷீ ஆக்களிடத்தில் அகீதா சார்ந்த ஒரு சொற்பிரயோகமாகும். கடைசி இமாம் ஓர் பதுங்கு குழியினுள் மறைந்து வாழ்கிறார் என்ற நம்பிக்கையில் அனைத்துப் பிரிவினரும் பெரும்பாலும் உடன்படுகின்றனர்.

**ரஸ்ஆ**

ரஜ்ஆ என்றால் மொழி அடிப்படையில் மீண்டு வருதல் என்று பொருள். அக்கோட்டிாட்டின்படி சீயாக்கள் தமது மறைந்து போன இமாம் மீண்டும் வருவார் என்றும் அவர் சீயாக்களின் உரிமைகள் அனைத்தையும் மீட்டுக் கொடுப்பார் என்றும் நம்புகின்றனர்.

**தனிய்யா**

தகிய்யா என்பதன் மொழிக்கருத்து பாதுகாத்துக் கொள்ளல் என்பதாகும். பரிபாசையில் சீயாக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவதற்காகவோ அல்லது தமது பிரசார நடவடிக்கைகளுக்காகவோ தமது நம்பிக்கைக்கு முரணாக வெளிப்படுத்தும் தந்திரோபாயமான செயற்பாடுகளைக் குறிக்கிறது. ஷீஆக்கள் தகிய்யாவை அகீதா சார்ந்த விடயமாகவே நோக்குகின்றனர் யாரிடம் தகிய்யா இல்லையோ அவரிடம் ஈமான் இல்லை என்பது இவர்களின் நம்பிக்கையாகும்.

**தீனா**

களிமண் எனப் பொருள் தரும் இச் சொல் சீயாக்களிடத்தில் ஸீஸைன்(ரழி) அவர்களது அடக் கஸ்தலத்திலிருந்து பெறப்பட்ட மண்ணுடன் தொடர்பான சில நம்பிக்கைகளைக் குறிக்கிறது.

**முத்ஆ**

இன்பப் பொருள் என்பது இதன் மொழிக்கருத்து. பரிபாசையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் அடிப்படையில் செய்து கொள்கின்ற தற்காலிகத் திருமணம் முத்ஆ எனப்படுகிறது.

### 03) ஷீஆக்களின் உட்பிரிவுகள்

**இஸ்னா அஸரிய்யா**

இஸ்னா அஸரிய்யா என்றால் பன்னிருவரைச் சார்ந்தோர் எனப் பொருள்படும். இமாம்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு என்று நம்புவதனாலாகும். இஸ்னா அஷரிகளே இன்று உலகில் மிகக்கூடிய எண்ணிக்கையும் செல்வாக்கும் கொண்ட ஷீஆப் பிரிவினராவர்.

**இஸ்மா ஈலிய்யா**

இஸ்மாஈல் என்பவரைப் பின்பற்றுபவர்களே இஸ்மாஈலிய்யா எனப்படுகின்றனர். மஹ்தி இஸ்மாஈல் என்றும் அவர் மரணிக்கவில்லை மீண்டும் வருவார் என்றும் நம்புகின்றனர்.

**பாத்தினிகள்**

இஸ்மாயிலிய இலட்சியப்பணிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட, இரவு முழுதும் நின்று வணங்கக் கூடிய பகல் முழுவதும் நோன்பு நோற்கக் கூடிய அநாமதேய மனிதர் ஒருவர் கூபாவில் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாக தோற்றம் பெற்ற அமைப்பபே பாதினிகளாவர். இவர்கள் வரலாற்றில் தோன்றிய மிகமோசமான பிரிவினராவர். ஒரு காலத்தில் கராமைத் என்பவரால் வழி நடாத்தப்பட்டதனால் இவர்கள் கராமிதாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். பாதினிக்களைச் சார்ந்து நிஸாரிகள், முஸ்தாலிகள், துருஸ்கள், முகன்னாஹ் போன்ற பல பிரிவுகள் தோற்றம் பெற்றன.

**ஸைதிக்கள்**

ஹீஸைன் (ரழி) அவர்களின் மகன் அலி அவர்களின் இரண்டாவது புதல்வர் ஸைத்(ரஹ்) அவர்களைப் பின்பற்றியவர்களே ஸைதிகள் எனப்படுகின்றனர். இவர்கள் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமா அத்தினருக்கு மிகவும் நெருக்கமான ஷீஆப்பிரிவினராவர். இமாம் ஸைத் அவர்கள் ஒருபோதும் முதல் மூன்று கலீபாக்கள் பற்றிக் குறைகூறியதில்லை.

**நுஸைரிகள்**

முஹம்மத் பின் நுஸைத் என்பவரினால் உருவாக்கப்பட்ட ஷீஆப்பிரிவினரே நுஸைரிகள் எனப்படுகின்றனர். அலி (ரழி) அவர்களுக்கு தெய்வீக அந்தஸ்து இருப்பதாக வாதிடும் இவர்கள் அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முஸ்ஜிமையும் நேசிக்கின்றனர்.

**வினா 07**

**மறுமை வாழ்வு என்பதை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தலைப்புக்களை விளக்குக.**

1. மறுமை உண்டு என்பதற்கான ஆதாரங்கள்
2. உலக முடிவிற்கான அடையாளங்கள்

அறிமுகம் "மறுமை பற்றிய நம்பிக்கை ஈமானின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். உலக வாழ்க்கைக்கு பின், முடிவில்லாத நித்தியமான இன்னொரு வாழ்வு உண்டு. இவ்வுலகம் சோதனைக்களமாகும். இங்கு மனிதன் குறித்த காலம் வாழ்வான் அல்லாஹ் இவ்வுலகை தவணை முடிந்த பின் அழித்து விடுவான். பின் உலகில் வாழ்ந்த அனைத்து மனிதர்களும் இன்னொரு வாழ்க்கைக்காக எழுப்பப்படுவார்கள். அவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் பின் விசாரணை செய்யப்படும். விசாரணையின் பின் சிலர் நிரந்தரமாக நரகத்திற்கும் மூன்றாம் சாரார் தமது குற்றத்துக்குரிய தண்டனையை தரகில் பெற்றுக் கொண்ட பின் சுவர்க்கத்திற்கு செல்வர். இதுவெ மறுமை பற்றிய இஸ்லாமிய நம்பிக்கையின் சுருக்கமாகும்."

**1. மறுமை உண்டு என்பதற்கான ஆதாரங்கள்**

உக்கிப்போன எலும்புத்துண்டைக் கொண்டு வந்து நபியவர்களிடம் இதை எப்படி உமது இறைவன் மீண்டு எழும்புவான் எனப் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்லாஹ் அல்.குர் ஆனில் பதில் கூறுகிறான்.

"(நபியே! அதற்கு) நீர் கூறுவீராக: "முதன் முறையில் அதனைப் படைத்தானே அத்தகையவனே அதனை உயிர்ப்பிப்பான்: அவன் ஒவ்வொரு படைப்பைப் பற்றியும் நன்கறிவான்"

பிறப்பும் இறப்பும் கொண்ட இவ்வுலக வாழ்க்கை என்பது காலத்தின் கோலம் என்று வாதிட்டவர்களுக்கு அல்குர்ஆன் அறியாமையை சுட்டிக்காட்டியது.

"(நபியே!) நீர் (அவர்களிடம்) கூறுவீராக" அல்லாஹ் (தான்) உங்களை உயிர்ப்பிக்கின்றான். பின்னர் அவன் மரணிக்கச் செய்கிறான் பின்னர் மறுமை நாளுக்காக (உயிர் கொடுத்து) உங்களை அவன் ஒன்று சேர்ப்பான் இதில் சந்தேகமில்லை. எனினும் மனிதர்களில் பெரும்பாலானோர் அறியமாட்டார்கள் (45:26)

மறுமை சாத்தியமான ஒன்றா எனச் சந்தேகம் கொண்டோரைப் பார்த்து அல்குர்ஆன் பதில் கூறுகிறது.

"நாமே உங்களுக்கிடையில் மரணத்தை ஏற்படுத்தியுள்ளோம். நாம் தோற்கடித்தவரும் அல்லர். (56:60)

எந்த முன்மாதிரியும் இல்லாமல் முதலில் உலகைப் படைத்த அல்லாஹ்வுக்கு இரண்டாம் முறை அதனை உருவாக்குவது மிகவும் இலகுவானது என்றது.

"அவன் எத்தகையவனென்றால், படைப்பை அவன் தொடங்குகின்றான் பின்னர் அதை அவன் மீளவைக்கிறான். இது அவனுக்கு மிகவும் எளிதானதாகும். வானங்களிலும், பூமியிலும் மிக்க மேலான வர்ணனை அவனுக்குரியதே. மேலும் அவனே (யாவற்றையும்) மிகைத்தவன் தீர்க்கமான அறிவுடையன்" (30:27)

மறுமை நம்பிக்கையற்றோர் அது எப்போது வரும் என்று நபியவர்களிடம் பரிகாசமாகக் கேட்பதற்கு அல்-குர்ஆன் பதில் கூறியது.

(நபியே!) மறுமை பற்றிய - அது எப்பொழுது (வெளிப்பட்டு) நிலைபெறும் என உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். (79:42)

அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் மறுமை நம்பிக்கை அறிவுக்கு அப்பாற்றப்பட்டது என்போருடைய வாதமும் அன்றைய மறுப்பாளர்களின் வாதத்தை ஒத்ததே.

**02) உலக முடிவிற்கான அடையாளங்கள்**

மறுமை நான் எப்போது வரும் என்பது பற்றிய அறிவு மனிதனுக்கு மறைவானதாக இருப்பினும் அது வர இருப்பதைக் காட்டும் அடையாளங்களை அல்லாஹ் வெளிப்படுத்தியுள்ளான். மறுமை நாளின் அடையாளங்கள் பெரியவை, சிறியவை என இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன.

**சிறிய அடையாளங்கள்**

அல்லாஹ்வின் தூதரென்று வாதிக்கும் ஏறத்தாழ 30 பொய்யர்கள் தோன்றுவர்.
அறிவை சுமந்த அறிஞர்கள் மரணிப்பர்
பூகம்பங்கள் அதிகரிக்கும்
காலம் சுருங்கும், குழப்பங்கள் அதிகரிக்கும், கொலைகள் அதிகரிக்கும்.
தர்மம் பெறுவோரை விட கஷ்டப்படும் அளவுக்கு உங்கள் மத்தியில் செல்வம் கொழிக்கும்
சூரியன் மேற்கில் உதிக்கும்
மனிதர்கள் உயர்கட்டிடங்கள் கட்டுவதில் போட்டியிடுவர்.

**உலக முடிவிற்கான பெரிய அடையாளங்கள்**

இமாம் மஹ்தி அவர்கள் தோன்றி நீதியான ஆட்சி செய்வார்.
தஜ்ஜாலின் வருகை
தஜ்ஜாலை அழிப்பதற்காக ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் இவ்வுலகிற்கு அனுப்புவான்.
யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் தோன்றுதல்
இரவு நீண்டு கொண்டே போகும்.
தாப்பதுல் அர்ழ் எனும் பெயரைக் கொண்டு பூமியில் திரியக்கூடிய பிராணி தோன்றுதல்
கஃபா இடிக்கப்படல்

இவ்வாறு மறுமை முடிவிற்கான அடையாளங்கள் மற்றும் மறுமை உண்டு என்பதற்கான ஆதாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**08) இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை விளக்குக?**

இஸ்லாம் என்ற சொல் "ஸிம்ம்" என்ற அறபுச்சொல்லிருந்து பிறந்துள்ளது. இது சாந்தி, பரிசுத்தம், பணிவு, பாதுகாப்பு என்ற கருத்துக்களைக் கொண்டது. இஸ்லாமிய பரிபாஷையில் இஸ்லாம் என்பது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டுவந்த எல்லா அம்சங்களும் உள்ளடக்கிய வாழ்க்கை முறையைக் குறிக்கும்.

இஸ்லாத்தின் சிறப்பம்சங்களாக

தனிமனித செல்வாக்கிலன்றி இறைவழிகாட்டலால் நபி ஒருவரின் வஹிமூலம் பெறப்பட்ட அறிவையும் வழிகாட்டலையும் கொண்டு உருவாக்கப்பட்டதே இஸ்லாம் மார்க்கமாகும்.

ஆன்மீகத்தையும் உலகியலையும் இணைத்து மனித சமூதாயத்திற்கு வழிகாட்டும் மார்க்கம் இஸ்லாம் மார்க்கம் ஆகம்.

இஸ்லாம், சமயக் கருத்துக்களை முன்வைக்கும் அதே நேரம் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, கலாசாரம், முதலான வாழ்வின் எல்லா விடயங்களிலும் அக்கறை கொண்டுள்ளது.

இஸ்லாம் மார்க்கம் ஒரு சமூகமார்க்கமாக விளங்குகிறது. அதாவது நபி(ஸல்) அவர்கள் தனிநபர்களை உருவாக்கிய அதேநேரம் ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதிலும் அதனூடாக இஸ்லாத்தை நடைமுறைப்படுத்திக் காட்டுவதிலும் அதிக கவனம் செலுத்தினார்கள்.

சமூக வாழ்வுக்கான பயிற்சிப் பாசறையாக இஸ்லாம் மார்க்கம் அமைந்து காணப்படுகிறது. இது தனிமனித, சமய, சமூக, பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார, சர்வதேச விவகாரங்கள் அனைத்திற்கும் தலைமையாக இயங்குகின்றது.

இஸ்லாம் மார்க்கமானது நெகிழும், நெகிழாத் தன்மையைக் கொண்டது.

சமுதாயத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக இஸ்லாம் இஜ்திஹாத் என்ற வழிமுறையை காட்டித்தந்துள்ளது.

மனிதனின் இம்மை, மறுமை வாழ்வுக்கான எல்லா விடயங்களும் உள்ளடக்கியுள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது.

எனவே இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும், எல்லாப் பிரதேசத்திற்கும், எல்லா இனத்தவருக்கும் பொருத்தமான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது என்பது மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

**பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்**

அறிமுகம்:- பிரபஞ்சம் என்பது அல்லாஹ் தவிர்ந்த அனைத்துப் படைப்புக்களையும் குறிக்கின்றது. உலக வாழ்வையும், அதன் இலக்கையும், புரிந்து கொள்வதற்கு பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

"வானத்தையும், பூமியையும் இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காக நாம் சிருஷ்டிக்கவில்லை. இது நிராகரிப்போரின் எண்ணமேயாகும். நிராகரிக்கும் இவர்களுக்கு கேடுதான். இவர்களுக்கு நரக நெருப்பே கிடைக்கும்"

**பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமியக் கருத்தியல்கள் வருமாறு:**

பிரபஞ்சம் என்பது அல்லாஹ்வின் படைப்பு.

"நிச்சயமாக உங்கள் அல்லாஹ் தான் வானத்தையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலைநாட்டினான்" (அல் அஃராப்:54)

பிரபஞ்சத்தின் உரிமையாளன் அல்லாஹ்

"வானத்திலும் பூமியிலுமுள்ளவை அவனுக்கு சொந்தமானவை"

(அல் பகரா:225)

பிரபஞ்ச ஆட்சியதிகாரம் அல்லாஹ்குரியது

"வானங்கள் பூமியின் ஆட்சி அவனுக்குரியதாகும்" (அல் அஸ்ராப்:185)

பிரபஞ்சம் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டிலிருந்தல்

"வானங்கள் பூமியாகிய இவ்விரண்டும் தம் நிலையிலிருந்து விலகி விடாதபடி தடுத்துக் கொண்டிருப்பவன நிச்சயமாக அல்லாஹ் தான்..." (ஃபாதிர்:41)

பிரபஞ்சப் பொருட்களின் நிலை - நித்தியமற்றவை, அழியக்கூடியவை

"இந்தப் பூமியின் மேலுள்ள ஒவ்வொரு பொருளும் அழியக்கூடியதே" (அர்ரஹ்மான்:26)

இப் பிரபஞ்சப் பொருட்கள் எதுவும் வணங்குதற்குரியவை அன்று

"மேலும், தங்கள் தீனை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாகியவர்களாகவும், முற்றிலும் ஒருமைப்பட்டவர்களும் அல்லாஹ்வுக்கு அடிபணிய வேண்டும் என்பதனையும் தவிர வேறு எந்தக் கட்டளையும் அவர்களுக்கு இடப்படவில்லை (அல் பய்யினா: 05)

**வினா 09**

1. இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)
2. இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**வினா 10**

1. செல்வப் பங்கீடு பற்றிய இஸ்லாத்தின் நோக்கை விளக்குக. (10 புள்ளிகள்)
2. முஆமலாத் தொடர்பான இஸ்லாமிய ஒழுக்கமாண்புகள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**வினா 11**

1. திருமணத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)
2. குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**வினா 12**

1. உணவு, உடை, வீடு தொடர்பான இஸ்லாமிய சட்ட விதிகளை விரிவாக விளக்குக. (10 புள்ளிகள்)
2. விவாகரத்தின் வகைகளை விரிவாக விளக்குக. (10 புள்ளிகள்)

09) 1. அல்லாஷ்விடமிருந்து பெறப்பட்ட தெய்வீகத் தன்மை கொண்டது. சமகாலத்தில் நெகிழாத் தன்மையும் நெகிழும் தன்மையும் கொண்டது. இயற்கைக்கும் மனித இயல்புக்கும் ஏற்ற பொருளாதார முறை, ஒழுக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருளாதார முறை, சமூக நலனுக்கும் தனிமனித நலனுக்கும் இடையில் இணக்கம் காணல், அல்லாஹ்வின் அருள் அபிவிருத்தி மற்றும் நீதியைக் கொண்டமைந்துள்ளமை, இபாதத்தாக கருதப்படுதல், பூரணத்துவம் வாய்ந்தது. இவற்றுள் ஐந்து அம்சங்களை விளக்கி எழுதியிருப்பின். (5x2 = 10 புள்ளிகள்)

2. முஷாரகா, முழாரபா, முராபஹா, முஸாரஆ, ஸலம், கைஉல்முஅஜ் ஜல், இவற்றுள் ஐந்தை விளக்கி எழுதியிருப்பின் (5x2 = 10 புள்ளிகள்)

10) 1. பூமியிலுள்ள செல்வங்கள், வளங்கள் யாவற்றையும் மனிதனுக்காகப் படைத்து அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பையும் மனிதனுக்கே வழங்கியுள்ளான். இது பற்றிய குர்ஆனின் கருத்துக்களும், நபியவர்களின் கால சம்பவங்களும் விளக்கப்பட்டு செல்வப் பங்கீட்டுக்கான இஸ்லாத்தின் கோட்பாடுகளும் வழிமுறைகளும் விளக்கப்பட்டிருப்பின் (10 புள்ளிகள்)

2. உண்மை பேசுதல், நாணயம், அஞ்ஞஸீஹாவைப் பேல், நேர்மையும் நீதமும், தாராளத் தன்மை, ஏனையவர்களது உரிமைகளைப் பேணல், எல்லைப்படுத்தப்படாத தர்மம் இவற்றுள் ஐந்தை விளக்கி எழுதி இருப்பின் (10 புள்ளிகள்)

11) 1. திருமணம் தொடர்பான அல்குர்ஆன், ஸுன்னாவின் கருத்துக்கள்

- ✷ அகில உலகுக்கும் ஒரு முன்மாதிரியான வாழ்க்கையொன்றை வழங்குகிறது
- ✷ ஈருலக வெற்றிக்கு வழிவகுத்தல்
- ✷ ஆண்கள், பெண்கள் தம் கற்பையும் ஒழுக்கத்தையும் பாதுகாத்தல்
- ✷ பண்பாடுள்ள சமூக இனவிருத்திக்கு அடிப்படையாகவுள்ளது.
- ✷ கணவன், மனைவியரிடையே அன்பும், இரக்கம், பாசம், பரஸ்பர உதவி செய்வதையும் ஊக்குவிக்கிறது.
- ✷ ஒரு தலைமுறை இன்னொரு தலைமுறைக்கு மனிதத்துவப் பண்பாடுகளைக் கடத்த முடி கின்றமை.
- ✷ பாலியல் உணர்வை நெறிப்படுத்துவதற்கு வழிவகுத்தல் இவைபோன்ற 5 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் (10 புள்ளிகள்)

2. சிறந்த குடும்பங்கள் உருவாகுவதையும், சிறந்த சமூகம் உருவாகுவதையும் இலக்காக வைத்து சிறந்த தனி மனிதனை உருவாக்குவதற்கான போதனைகளை இஸ்லாம் முன்வைத் துள்ளது.

கணவன் மனைவி கடமைகளும் உரிமைகளும், பிள்ளைகள் தொடர்பான பெற்றோருக்குள்ள கடமைகள், பெற்றோருக்கு பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகள், இரத்த உறவுகள் கடமைகளும் உரிமைகளும் இவ்வாறான விடயங்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் (10 புள்ளிகள்)

12) 1. ஹலாலான உணவைத் தேடி உண்பது தொடர்பான அல்-குர்ஆன், ஸுன்னா போதனைகள்.
உடை தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகள்
வீட்டு வாழ்க்கை தொடர்பான இஸ்லாமிய சட்டவிதிகள்
இவை விரிவாக விளக்கப்பட்டிருப்பின் (10 புள்ளிகள்)

2. தலாக், பஸ்கு, குல்உ, லிஆன், லிஹார், ஈலாஉ போன்றவை விரிவாக விளக்கப்பட்டிருப்பின் (10 புள்ளிகள்)

## ஆன்மீக மேம்பாடு

**வினா 13**

இபாதா பற்றிய இஸ்லாமிய கோட்பாட்டினை விளக்குக.

- ✷ இபாதத் "அபத" உபூதிய்யா எனும் அரபுச் சொல்லில் இருந்து தோன்றியது
- ❖ இதன் பொருள் அடிபணிதல், பணிபுரிதல், வணங்குதல்.....
- ✷ விசுவாசி அல்லாஹ் மீது கொண்ட அன்பின் அடிப்படையில் ஏவல் விலக்கல்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதைக் குறிக்கின்றது. (இஃலாஸுடன் வாழ்வதாகும்)

- ✷ இபாதத் வகைகள்
- ❖ பர்ழு - ஸுன்னத்
- ❖ ஹுகூகுல்லாஹ் - ஹுகூகுல் இபாதத்

- இபாதத்திற்கான நிபந்தனைகள்
  - தூய எண்ணம்
  - ஷரீஆவின் அனுமதி
  - நேர்த்தி
  - அடிப்படை வணக்கங்களுக்கு தடையாக அமையாதிருத்தல்
  - ஷரீ ஆவினை மீறாத நிலை
- இபாதத் நிறைவேறுவது எப்போது:-
  - கிஹ்லாஸ் (தூய எண்ணம்) வர ஃ (பேணுதல்), தக்வா (இறையச்சம்) குஷுஉ (பய உணர்வு), குளூஃ (பணிவு) என்பவற்றுடன் நிறைவேற்றும் போது அது பூரணம் அடைகின்றது.
- ஆதாரங்கள்

  ஜின்களையும் மனிதர்களையும் (எனக்கு வழிபட்டு) என்னை வணங்குவதற்காகவன்றி (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை" (51:56)

  இது போன்ற ஹதீஸ் அல்குர்ஆன் வசங்களை சேர்க்கவேண்டும்

**வினா 14**

1. இஸ்லாத்தில் ஆன்மீக மேம்பாட்டுக்குத் துணை புரியும் அம்சங்களை விளக்குக.
2. ஆன்மீக மேம்பாட்டிற்குத் தடையாக உள்ள அம்சங்களை விளக்குக.

**1. ஆன்மீக மேம்பாட்டுக்கு துணை புரியும் அம்சங்கள்**

- தௌபா - திரும்புதல், மீளுதல் (பாவ மன்னிப்பு)
  - நோக்கம்
  - தௌபாவின் பயன்கள்
  - நிச்சயமாக அல்லாஹ் அடிக்கடி பாவ மன்னிப்புக் கோருபவர்களையும் தூய்மையாக இருப்பவர்களையும் விரும்புகின்றான் (பகரா 222)
  - ஆதாரங்கள்
- தக்வா (இறையச்சம்)

  விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள் நீங்கள் முஸ்லிமாகவேயன்றி மரணிக்க வேண்டாம் (ஆல இம்ரான் 102)
- வரஃ (பேணுதல்)

  சந்தேகமான ஒரு செயலைக் கூட தவிர்ந்து நடந்து பேணுதலாக வாழ்வதைக் குறிக்கின்றது.
- ஸுஹ்த் (பற்றின்மை)

  உலக வாழ்வில் தீவிர ஈடுபாடு கொண்டு வாழாது சமனிலைப் போக்கை குறிக்கின்றது.

  உலக வாழ்க்கை வீண் விளையாட்டும் கேளிக்கைகளுமாகும் தக்வா உள்ளவர்களுக்கு மறுமையே சிறந்ததாகும்" நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? (அல் அன் ஆம் 32)
- மஹப்பத்:- அல்லாஹ் மீதும் நபி(ஸல்) மீதும் முதலானான அன்பு செலுத்தல்

  அல்லாஹ் மீது மஹப்பத் வைப்பதன் முக்கியத்துவம்

  மஹப்பத் மூலம் கிடைக்கும் பயன்கள்
- ரிழா (திருப்தி)

  இறை திருப்தியை நோக்காக கொண்டு தொழிற்படல் கவனத்தை அடையும் வழிகளாகும்

  நபி(ஸல்), ஸஹாபாக்கள் ரிழா (திருப்தியை அடைய செயற்பட்ட தியாகங்கள்)

  (அனைத்துக்கும் அல்குர்ஆன், ஹதீஸ் பிரதானமானதாகும்)

2. ஆன்மீக மேம்பாட்டிற்குத் தடையாகவுள்ள அம்சங்கள்
   - பொய் பேசுதல் — பாவங்களின் பிறப்பிடம்

     நபி(ஸல்) வெறுத்த செயல்

❖ அகம்பாவம் பொய்யின் பாதக விளைவும் (அல்குர் ஆன், ஹதீஸ்)
தற் பெருமை அழிவை ஏற்படுத்தும்
கண்ணியம் மதிப்பை ஏற்படுத்தும்
❖ பெருமை பெருமையினால் ஏற்படும் பாதக விளைவுகள்
❖ கோள் இபாதத்திற்கு எதிரானது
❖ அவதூறு பெரும் பாவம், தண்டனை (80 கசையடி)

குறிப்பு: அல்குர்ஆன், ஹதீஸ், ஹகாப்பாக்களின் வரலாற்றுச் சம்பவங்களை எடுத்துக் கூறி விளக்க வேண்டும்.

**வினா 15**

1. இபாதத் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் பற்றி விளக்குக.
2. இஸ்லாமிய வணக்க வழிபாடுகளின் முக்கிய நோக்கங்கள்

1. தௌஹீத் பற்றிய விளக்கம் உலூஹிய்யாத் - இலாஹ் (இறைவனுக்கு இணையாக எதுவுமில்லை)
ரூபிய்யத் - ரப் என்ற சொல்லின் தோற்றம்
வஸ்ஸிபாத் - மேற்படி விடயங்களை ஏற்று நம்பி நடப்பது.

❖ (21:25), (2:165) (2:186) (6:121) அல்குர் ஆன் வசனங்கள் ஆதாரம்
❖ தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ்.. அத்துடன் ஏனைய அனைத்து விடயங்களும் அல்லாஹ்வுக்கே உரியது என நிறைவேற்றும் போது தான் ஏற்றுக்கொள்ளப்படும்.
❖ பாதிக்கும் விடயங்கள்: குப்ர், ஷிர்க்

2. இஸ்லாமிய வணக்க வழிபாடுகளின் முக்கிய நோக்கங்கள்
❖ சுருக்கமான ஈமான் (ஈமான் முஜ்மல்)
❖ விரிவான ஈமான் (ஈமான் முபஸ்ஸல்)
❖ இவற்றுடன் எம் வாழ்வின் வணக்க வழிபாடுகளின் முக்கியங்கள்
❖ வெற்றிக்கான வழிகள் (இம்மை, மறுமை)
❖ ஈமானின் தாக்கங்கள்
❖ அல்குர்ஆன் ஹதீஸ் விளக்கங்கள்

**வினா 16**

4. அடிப்படை இபாதத்துகளைக் குறிப்பிட்டு அதன் ஆன்மீக, லௌகீகப் பண்பாட்டை விளக்குக.

விடைகள்

இபாதத் வகை: 1. அடிப்படை (தொழுகை, நோன்பு.....)
2. அன்றாட நடவடிக்கைகள் (உண்ணல், வியாபாரம், குடும்பவாழ்வு)

❖ தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ்..... தனித் தனியாக விளக்குதல்

❖ சமூகவியல் சார்ந்த இலக்குகள் (உ+ம்)
  ❖ வீண் வார்த்தைகளைத் தவிர்த்தல்
  ❖ பிறரை மதித்தல்

❖ ஆன்மீகப் பயன்கள்
  ❖ தக்வா ஏற்படும்
  ❖ அடிமை, அர்ப்பணிப்பு, தியான உணர்வு ஏற்படும்
  ❖ பாவ மன்னிப்புக் கிடைத்தல்

- ❖ லௌகீகப் பயன்பாடு
  - ❖ சகோதரத்துவம்
  - ❖ மனித நேயம்
  - ❖ மன அமைதி

அல்குர் ஆன் ஹதீஸ் விளக்கங்கள் தேவை

**வினா 17**

அடிப்படை வணக்கங்களின் முக்கியத்துவங்களையும் நோக்கங்களையும் ஆராய்க.

- ❖ அடிப்படை இபாதத் (ஐம்பெரும் கடமைகள் முழு வாழ்வையும் வெற்றி பெற வழி செய்யும் அத்துடன் ஏனைய இபாதத்களையும் கவனம் செலுத்துவது பிரதானமாகும்)
- ❖ ஐம்பெரும் கடமைகள்
- ❖ கலிமா, தொழுகை, ஸகாத் நோன்பு, ஹஜ்

தனித்தனியாக முக்கியத்துவம், நோக்கங்கள் என்பவற்றை விளக்க வேண்டும்.

உ+ம் தொழுகை பற்றி விளக்கம்

- ❖ மிக முக்கிய வழிபாடு தொழுகை (இரண்டாவது கடமை)
- ❖ சுவர்க்கத்தின் திறவுகோல்
- ❖ இஹ்ராம் தக்பீருடன் ஆரம்பிக்கப்பட்டு பர்ளான, ஸுன்னத் ஓதல்கள் செயற்பாடுகளில் முடியும் இறைவனுக்கான வணக்கமாகும்.
- ❖ நிச்சயமாக தொழுகையானது மானக்கேடான வெறுக்கத்தக்க கருமங்களில் இருந்து (மனி தனைப்) பாதுகாத்து விடும் (29:45)
- ❖ முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையேயுள்ள வித்தியாசம் தொழுகையை விடுவதாகும் முஸ்லிம்
- ❖ தொழுகை உடல், உள பரிசுத்தத்திற்கு உதவுதல்
- ❖ உடலுக்கு சிறந்த உடற்பயிற்சி

  இறையருள் கிடைக்கின்றது.
  இறை நெருக்கம் ஏற்படுகின்றது.
  நேர முகாமைத்துவம் தருகின்றது
  பரஸ்பரம், தலைமைத்துவப் பயிற்சி கிடைக்கின்றது.
  ஆன்மீக விமோசனத்திற்கு முதலிடமாவது தொழுகையாகும்.

- ❖ பர்ளு, சுன்னம் (தெளிவு)
- ❖ கூட்டுத் தொழுகையின் முக்கியத்துவம்
- ❖ பிரார்த்தனை

இவ்வாறான விடயங்களைத் தெளிவாக அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களைச் சேர்த்து அடிப் படை இபாதத்களை தனித்தனியாக தெளிவுபடுத்த வேண்டும்.